# கழக முப்பெரும் விழா... கரூரில் திருவிழா!

## உங்களில் ஒருவன் கடிதம்!... முதல் பக்கத் தொடர்ச்சி

**ஒன்றிய பா.ஜ.க அரசின் வஞ்சகத்தாலும், அதனிடம் அடிமையாக இருக்கின்ற அ.தி.மு.க.வின் துரோகத்தாலும் நாம் இழந்தவற்றை மீட்கும் முயற்சியில் கடந்த நான்காண்டுகளில் பெருமளவு முன்னேறியுள்ளோம். பொருளாதாரத்தில் இரட்டை இலக்கத்திலான வளர்ச்சி, பள்ளிக்கல்வி மற்றும் உயர்கல்வியில் உயர்ந்த நிலை, மருத்துவத்துறையில் மக்களின் நலன் காக்கும் சிறந்த கட்டமைப்பு, இந்தியாவிலேயே அதிக தொழிற்சாலைகளைக் கொண்ட மாநிலம், அதிகளவில் வேலைவாய்ப்புகளை உருவாக்குகிற மாநிலம், பெண்களின் முன்னேற்றத்திற்கும் தற்சார்பு நிலைக்கும் வழிவகுக்கும் மாநிலம் என்று ஒன்றிய அரசின் புள்ளிவிவரங்களே தமிழ்நாட்டின் சாதனைகளை எடுத்துச் சொல்லும் அளவுக்குத் திராவிட மாடல் அரசு சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது.**

அண்மையில் ஜெர்மனி, இங்கிலாந்து நாடுகளுக்குச் சென்று தமிழ்நாட்டுக்கான தொழில் முதலீடுகளை ஈர்த்த நிலையில், அங்கு வாழும் தமிழர்கள் நம் மாநிலத்தின் நிலை கண்டு பெருமிதம் கொள்வதாகத் தெரிவித்தனர். உலகப்புகழ் பெற்ற ஆக்ஸ்ஃபோர்டு பல்கலைக்கழகத்தில் சுயமரியாதை இயக்க நூற்றாண்டுக் கருத்தரங்கில் தந்தை பெரியாரின் உருவப்படத்தை அவரது கொள்கை வாரிசாகத் திறந்து வைக்கும் வாய்ப்பு கிடைத்தபோது நம் ஆட்சியின் சாதனைகள் யாவும் பெரியார் - அண்ணா -கலைஞர் ஆகியோரின் வழித்தடத்தில் தொடர்வதை உணர்ந்தேன். திராவிடத்தை உலக நாடுகள் அறிந்துகொண்டு ஆய்வு செய்கின்ற காலத்தில் நாம் இருக்கிறோம்.

**உலகம் போற்றும் திராவிடத்தின் பெருமை தொடர்ந்திட, தமிழ்நாட்டில் திராவிட மாடல் ஆட்சி நீடித்து நிலைத்திட, ஏழாவது முறையாகக் கழக ஆட்சி மலர்ந்திட கரூரில் நடைபெறும் முப்பெரும் விழா வெற்றிப்பாதையாக அமையட்டும்! கொள்கையில்லாக் கூட்டத்தைச் சேர்த்து, கூக்குரலிட்டு, கும்மாளம் போட்டு, பொதுமக்களுக்கு இடையூறு செய்யும் இயக்கமல்ல தி.மு.கழகம். நாம் கூடும்போது கொள்கைப் பட்டாளமாகக் கூடுவோம்! கூட்டம் முடிந்து இலட்சிய வீரர்களாகப் புறப்படுவோம்!**

பேரறிஞர் பெருந்தகை அண்ணா போதித்த கட்டுப்பாட்டை முத்தமிழறிஞர் கலைஞர் கட்டிக்காத்து, இன்று உங்களில் ஒருவனான என் தலைமையிலும் அதே கட்டுப்பாட்டுடன் கொள்கைக் கூட்டமாக உடன்பிறப்புகள் திரள்வதை கரூரிலும் காண இருக்கிறேன்.

**இலட்சிய வீரர்களாக 2026 தேர்தல் களத்தில் வெற்றி வாகை சூடுவதற்கான முன்னோட்ட அணிவகுப்புதான் இந்த முப்பெரும் விழா.**

இருவண்ணக் கொடியேந்தி கொள்கைக் குடும்பமாக அணிதிரள்வீர்! இலட்சியத்தை நெஞ்சில் ஏந்தி, பாதுகாப்பாகத் திரும்பிச் செல்வீர். பெரியார் - அண்ணா - கலைஞர் புகழ் நிலைக்கட்டும்! கழகத்தின் வெற்றிச் சரித்திரம் தொடரட்டும்!

அன்புடன்,

**மு.க.ஸ்டாலின்**

திருவள்ளுவர் ஆண்டு 2056
ஆவணி 28
13-09-2025

## 2026 சட்டமன்றத் தேர்தலில் மக்கள் ஆதரவு தி.மு.க.விற்கே!

### திருச்சியில் அமைச்சர் கே.என்.நேரு உறுதி!

*திருச்சி, செப். 15 -*

திருச்சி மத்திய மற்றும் வடக்கு மாவட்ட செயற்குழு கூட்டம் கலைஞர் அறிவாலயத்தில் நடந்தது இந்த கூட்டத்தில் தி.மு.க. முதன்மைச் செயலாளரும் நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சருமான கே.என். நேரு பேசியதாவது..

வரும் செப்டம்பர் 17ஆம் தேதி கரூரில் நடக்கும் முப்பெரும் விழாவில் பங்கேற்க தமிழ்நாடு முதல்வர் அவர்கள் விமான வாயிலாக திருச்சி வருகிறார் காலையில் திருச்சி மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் பெரியார் நினைவாக உறுதிமொழி ஏற்கிறார். இதில் எம்பிக்கள் எம்எல்ஏக்கள் மாவட்ட நிர்வாகிகள் ஒன்றிய நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொள்கின்றனர்.

இதை அடுத்து முதல்வர் கரூர் மாவட்டத்தில் நடக்கும் முப்பெரும் விழாவில் பங்கேற்க உள்ளார் அதில் திருச்சி மாவட்டத்திலிருந்து பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட கழக நிர்வாகிகள் பங்கேற்க வேண்டும். முதல்வருக்கு நம் ஆதரவை தெரிவிக்க வேண்டும்.

செப்டம்பர் 15ஆம் தேதி பேரறிஞர் அண்ணா பிறந்தநாள் விழாவில் அனைத்து பகுதிகளிலும் ஓரணியில் தமிழ்நாடு இயக்கத்தில் சேர்ந்த உறுப்பினர்களை அழைத்து கூட்டம் நடத்த வேண்டும் பொது இடங்களான சமுதாய கூடங்கள், பள்ளி மைதானங்கள் உள்ளிட்ட பகுதிகளில் பொது மக்களுக்கு இடையூறு ஏற்படுத்தாமல் நடத்த வேண்டும்.

ஒவ்வொரு பூத் நிர்வாகிகளும் குறைந்தபட்சம் 100 உறுப்பினர்களை யாவது கலந்து கொள்ள செய்து உறுதிமொழி ஏற்க வேண்டும் உறுதிமொழி ஏற்க தேவையான குறிப்புகள் ஒன்றிய செயலாளர்களுக்கு அனுப்பப்படும்.



மத்திய மாவட்டங்களில் மொத்தம் பதினோராயிரம் பூத்துகள் உள்ளன திருச்சி மாவட்டத்தை பொருத்த வரை 860 பூத்துகளுக்கும் ஒன்றிய செயலாளர் நகர செயலாளர்களுக்கு ஒரு புத்தகம் வழங்கப்படும் அதில் மறைந்தவர்கள் குடி பெயர்ந்தவர்கள் உள்ளிட்டோர் குறித்த தகவல்களை பதிவு செய்ய வேண்டும் இவ்வாறு செய்வதனால் பீகார் மாநிலத்தை போல் சிறப்பு தீவிர திருத்தம் வந்தால் அதை எளிதில் எதிர் கொள்ள எளிதில் இது நமக்கு கை கொடுக்கும்.

எதிர்வரும் தேர்தலை எதிர்கொள்ள திமுக தயாராக இருக்க வேண்டும். நமது பங்கு இந்த தேர்தலில் முக்கியமானதாக இருக்கும் மேலும் மற்ற கட்சியினர் குறித்து எதுவும் தவறாக விமர்சனம் செய்ய வேண்டாம் என முதல்வர் அவர்கள் நம்மை அறிவுறுத்தியுள்ளார் அதற்கு இணங்க நாம் செயல்பட வேண்டும் எதிர் வரும் தேர்தலில் யார் வந்தாலும் திமுகவே வெற்றி வாகை சூடும்.

எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிச்சாமி புதிய கட்சிகள் அதிமுகவுடன் கூட்டணி சேர்வதாக தெரிவித்தார் ஆனால் கூட்டணியில் இருந்த டிடிவி தினகரன் செங்கோட்டையன் ஓ. பன்னீர்செல்வம் உள்ளிட்ட முக்கிய நிர்வாகிகள் அவரை விட்டு பிரிந்து சென்று வட்டனர். பாமகவை பொருத்தவரை இரண்டு அணியாக பிரிந்து நிற்கின்றனர் தேமுதிகவும் சரியான கூட்டணியை இன்னும் தேர்ந்தெடுக்கவில்லை. சீமானும் தனித்து நிற்பதாக தான் கூறி யுள்ளார். எந்த கட்சியை காட்டிலும் திமுக கூட்டணி வலுவாக உள்ளது.

பத்திரிகையாளர்களும் திமுக கூட்டணி வலுவாக உள்ளதாக தெரிவித்துள்ளனர். பாஜக முன்னாள் மாநில தலைவர் அண்ணாமலையும் தமிழ்நாட்டு மக்கள் திமுகவிற்கு எதிராக இல்லை ஆதரவாக இருக்கிறார்கள் என கூறியுள்ளார் இது திமுகவின் பலத்தை காட்டுகிறது.

கட்சி தொண்டர்கள் மற்றும் நிர்வாகிகள் இந்த சமயத்தில் அயராது உழைக்க வேண்டும். சந்தேகமே இன்றி கழக தலைவர் அவர்களை மீண்டும் முதல்வர்.

திமுக மாவட்ட செயலாளர்கள் ஒன்றிய செயலாளர் என பிரித்து பார்க்கக் கூடாது அனைவருமே திமுகவின் குடும்பம். சமூக ஊடகங்கள் தற்போது உள்ளதால் பல்வேறு விமர்சனங்கள் எழுகிறது அதை கண்டுகொள்ளாமல் நாம் கட்சிப் பணியாற்றி திமுகவை மீண்டும் ஆட்சி அமைக்க செய்ய வேண்டும் இவ்வாறு அமைச்சர் பேசினார்.

அவரைத் தொடர்ந்து பெரம்பலூர் பாராளுமன்ற உறுப்பினர் அருண் நேரு பேசும்போது..

வருகின்ற தேர்தலில் தமிழக முதல்வரின் கரத்தை மேலும் உயர்த்துவதற்கான உண்மையான கூட்டம் இந்த கூட்டம்

நான்கு முனை போட்டியாக இருக்கப் போகிற இந்த தேர்தலில் நம்முடைய உழைப்பும், உயர்வும் உறுதியாக முதலமைச்சரின் கரத்தை உயர்த்த போகிறோம்.

இந்த தேர்தலில் நிறைய புது முகங்கள் வருவார்கள். அதனால் இந்த தேர்தலில் கடுமையான உழைப்பு வேண்டும். நம்முடைய முதல்வரை அதிகமான வாக்கு வித்தியாசத்தில் அதிக எம்எல்ஏக்களுடன் நாம் வெற்றி பெற வைப்போம் என்ற நம்பிக்கை உள்ளது என பேசினார்.



கரூரில் செப்டம்பர் 17ம்தேதி நடைபெறும் கழக முப்பெரும் விழா மைதானத்தில் நடைபெற்று வரும் பணிகளை அமைச்சர் சு.முத்துசாமி, மாவட்ட கழக செயலாளர் வி.செந்தில் பாலாஜியுடன் இணைந்து பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

## பேரறிஞர் அண்ணா 117-வது பிறந்த நாள் இன்று!

### திருவுருவச் சிலைக்கு முதல்வர் மு.க,ஸ்டாலின் மாலை அணிவித்து மரியாதை!

*சென்னை, செப். 15 -*

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், பேறறிஞர் அண்ணா அவர்களின் 117வது பிறந்த நாளை முன்னிட்டு, 15.9.2025 அன்று காலை 10.00 மணியளவில் சென்னை, அண்ணா சாலையில் அமைந்துள்ள அவர் திருவுருவச்சிலைக்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்துகிறார்கள்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் காஞ்சிபுரத்தில் நடராஜர் - பங்காரு அம்மாள் தம்பதியினருக்கு 15.9.1909 அன்று மகனாகப் பிறந்தார். எளிய குடும்பத்தில் பிறந்து சிறந்த மாணவராகவும், எழுத்தாளராகவும், ஆற்றல் மிக்க பேச்சாளராகவும், பண்பட்ட அரசியல் வாதியாகவும், உத்தமத் தலைவராகவும் திகழ்ந்தார். தமது சிறந்த பேச்சாற்றல் மூலம் மக்களிடையே அறிவுப் புரட்சியை ஏற்படுத்தினார். "கடமை, கண்ணியம், கட்டுப்பாடு" என்கின்ற கோட்பாட்டை மக்களிடையே விதைத்தார். மாற்றாரையும் மதிக்கக் கற்றுத்தந்த மாபெரும் தலைவர் ஆவார்.

பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியார் அவர்களைத் தம் தலைவராகக் கொண்ட பேரறிஞர் அண்ணா அவர்கள், தமது ஆட்சிக் காலத்தில் ஏழை, எளிய மக்கள் முன்னேற்றம் அடையும் வகையில் சிறப்பான பல திட்டங்களை வழங்கினார். தாய் மொழி மீது கொண்ட அளவற்ற பற்றின் காரணமாக, "சென்னை மாகாணம்" என்று அழைக்கப்பட்டு வந்ததை "தமிழ் நாடு" எனப் பெயர் மாற்றம் செய்தார்.

பேரறிஞர் அண்ணா அவர்களின் ஆட்சிக் காலத்தில் தான் இந்தியாவிலேயே முதன் முதலாக அரசுப் பேருந்துகள் நாட்டுடைமையாக்கப்பட்டன. கல்வியில் தமிழுக்கு முதலிடம் வழங்கினார். 1967ஆம் ஆண்டு ஏப்ரல் 14ஆம் நாள், சென்னை புனித ஜார்ஜ் கோட்டை என்ற பெயரை 'தமிழ்நாடு அரசு - தலைமைச் செயலகம்' என மாற்றம் செய்தார். 1968ஆம் ஆண்டு சென்னையில் இரண்டாம் உலகத் தமிழ் மாநாட்டை நடத்தினார். மத்தியில் கூட்டாட்சி, மாநிலத்தில் சுயாட்சி என்ற தத்துவத்தை வழங்கி தமிழ்நாடு முன்னேற சிறப்புடன் செயல்பட்டார்.

தமிழ்நாடு அரசின் முத்திரையான கோபுரச் சின்னத்தில் இருந்த 'கவர்மெண்ட் ஆஃப் மெட்ராஸ்' என்ற ஆங்கில வாக்கியத்தை நீக்கிவிட்டு, "தமிழ்நாடு அரசு" என மாற்றினார். தமிழ்நாடு அரசு பயன்படுத்தும், அரசு முத்திரையில் "சத்ய மேவ ஜெயதே" என்ற வடமொழித் தொடரை அகற்றி "வாய்மையே வெல்லும்" என்ற சொல்லை இடம் பெறச் செய்தார். "ஏழையின் சிரிப்பில், இறைவனைக் காண்போம்" என்ற கோட்பாட்டின் அடிப்படையில் தமிழ்நாட்டு மக்களின் முன்னேற்றத்திற்காக அரும்பாடுபட்டார். சொல்லாலும், செயலாலும், எழுத்தாலும் பேரறிஞர் அண்ணா அவர்கள் மறைந்தும், மறையாமல் மக்கள் மனதில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் ஆட்சிக்காலத்தில், பேரறிஞர் அண்ணா அவர்கள் கண்ட கனவினை நனவாக்கிடும் வகையில், கிராமங்கள் புத்துணர்வு பெற அண்ணா மறுமலர்ச்சித் திட்டம், பேரறிஞர் அண்ணா அவர்களின் புகழுக்கு மேலும் பெருமை சேர்க்கும் வகையில், சென்னை மெரினா கடற்கரையில் பேரறிஞர் அண்ணா நினைவிடம், மற்றும் தெற்காசியாவிலேயே மிகப்பெரிய அண்ணா நூற்றாண்டு நூலகம் ஆகியவற்றை அமைத்தார்.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களால் சென்னை, மெரினா கடற்கரை, காமராசர் சாலையில் அமைந்துள்ள பேரறிஞர் அண்ணா அவர்களின் நினைவிடம் முழுமையாகப் புனரமைக்கப்பட்டு, 26.2.2024 அன்று திறந்து வைக்கப்பட்டது.

பேரறிஞர் அண்ணா அவர்கள் பிறந்த நாளான செப்டம்பர் 15 ஆம் நாள் ஆண்டுதோறும் தமிழ்நாடு அரசின் சார்பில் அரசு விழாவாகக் கொண்டாடப்பட்டு வருகிறது.

அதன்படி, இந்த ஆண்டு கொண்டாடப்படும் பேரறிஞர் அண்ணா அவர்களின் 117வது பிறந்த நாள் நிகழ்ச்சியில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுடன், துணை முதலமைச்சர், அமைச்சர் பெருமக்கள், மேயர், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், துணை மேயர், உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்கிறார்கள்.

### கரூரில் நடைபெறும் தி.மு.கழக முப்பெரும் விழாவில்

## மேற்கு மண்டல இளைஞர் அணியினர் பெரும் திரளாகப் பங்கேற்க வேண்டும்!

### கழக இளைஞர் அணி துணைச் செயலாளர் கே.இ.பிரகாஷ் எம்.பி. வேண்டுகோள்!

*ஈரோடு, செப். 15 -*

கரூரில் நடைபெறும் தி.மு.கழக முப்பெரும் விழாவில் மேற்கு மண்டல இளைஞர் அணியினர் பெரும் திரளாகப் பங்கேற்க வேண்டும் என கழக இளைஞர் அணி துணைச் செயலாளர், ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ. பிரகாஷ் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் நல்லாசிகளுடன், துணை முதலமைச்சர், கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, கரூர் கோடங்கி பட்டியில், வருகின்ற செப்டம்பர் 17 அன்று கழகத்தின் கொள்கை திருவிழாவாம், தி.மு.க. முப்பெரும் விழா கரூர் மாவட்ட கழகச் செயலாளர், மேற்கு மண்டலப் பொறுப்பாளர், முன்னாள் அமைச்சர் வி.செந்தில் பாலாஜி ஏற்பாட்டில் நடைபெறவுள்ளது. முப்பெரும் விழாவில் கழக மூத்த முன்னோடிகளுக்கு கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் திருக்கரங்களால் விருதுகள் வழங்கப்படுகிறது.



அதுசமயம் முப்பெரும் விழாவில் மேற்கு மண்டலத்திற்குட்பட்ட கரூர், நாமக்கல், ஈரோடு, திருப்பூர், கோவை, நீலகிரி உள்ளிட்ட மேற்கு மண்டலத்தை சார்ந்த மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், கிளைக் கழக, வட்டக் கழக அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள், பாக இளைஞர் அணி நிர்வாகிகள் மற்றும் சமூக வலைத்தள இளைஞர் அணி நிர்வாகிகள் அனைவரும் பல்லாயிரக்கணக்கான இளைஞர்களை திரளாக கலந்து கொள்ள செய்ய வேண்டுமாய் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன் என்று வேண்டுகோள் விடுத்துள்ளார்.



ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மாவட்ட வளர்ச்சி திட்ட பணிகள் குறித்து வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் சு.முத்துசாமி தலைமையில் அனைத்து துறை அலுவலர்களுடனான ஆய்வு கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில் மாவட்ட ஆட்சி தலைவர் ச.கந்தசாமி, மாநிலங்களவை உறுப்பினர் அந்தியூர் ப.செல்வராசு, சட்டமன்ற உறுப்பினர்கள் ஈரோடு கிழக்கு வி.சி.சந்திரகுமார், அந்தியூர் ஏ.ஜி.வெங்கடாசலம், மேயர் சு.நாகரத்தினம், துணை மேயர் வி.செல்வராஜ், மாவட்ட வருவாய் அலுவலர் சாந்தகுமார், ஆணையாளர் அர்பித் ஜெயின், திட்ட இயக்குனர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை பிரியா, கோபிசெட்டிபாளையம் சார் ஆட்சியர் சிவானந்தம், மாவட்ட ஆட்சியர் நேர்முக உதவியாளர் முகமது குதூரத்துல்லா உள்ளிட்ட அனைத்து துறை சார்ந்த அதிகாரிகள் பலர் உள்ளனர்.